# 26

# ஆதம் (அலை) அவர்கள்

உலகின் முதல் மனிதன், ஆதம் (அலை) ஆவார். இதனால் அவர் 'அபுல் பஷர்' (மனித இனத்தின் தந்தை) எனவும் அழைக்கப்படுகின்றார்.

அல்லாஹ், ஆதம் (அலை) அவர்களை மண்ணால் படைத்தான். பூமியின் எல்லாப் பகுதியிலிருந்தும் அதற்காக மண் பெறப்பட்டது. இதனால், மண்ணின் நிறத்துக்கும் தன்மைக்குமேற்ப சிலர் வெண்மையாகவும், சிலர் கருமையாகவும் சிலர் செவ்வையாகவும், சிலர் இடைப்பட்ட நிறங்களிலும் காணப்படுகின்றனர். சிலர் மென்மையானவர்களாகவும், சிலர் கடுமையானவர்களாகவும், சிலர் நடுநிலமையானவர்களாகவும் இருப்பதற்கு இதுவே காரணம் என ஹதீஸ் (அஹ்மத்) கூறுகின்றது.

அல்லாஹ், ஆதம் (அலை) அவர்களைப் படைக்குமுன், மலக்குகளை ஒளியினாலும் ஜின்களை நெருப்பினாலும் படைத்தான். ஆதம் (அலை) அவர்களைப் படைக்கு முன், பூமியில் தனது பிரதிநிதியைப் படைக்கப்போவதாக மலக்குகளிடம் கூறினான். அதற்கு 'குழப்பம் செய்து இரத்தமோட்டக் கூடியவர்களையா நீ படைக்கப் போகிறாய்?' என மலக்குகள் தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தினர். அப்போது 'நீங்கள் அறியாததை நான் அறிவேன்' என அல்லாஹ் பதிலளித்தான். மனித இனத்தின் தந்தையாக ஆதம் (அலை) அவர்களைப் படைத்தான்.

அல்லாஹ், ஆதம் (அலை) அவர்களுக்கு எல்லாப் படைப்பினங்களின் பெயர்களையும் கற்றுக்கொடுத்தான். பின்னர், மலக்குகளை அழைத்தான். அப்படைப்பினங்களின் பெயர்களைக் கூறுமாறு கேட்டான். அவர்களோ, 'நாம் உம்மைத் தூய்மைப்படுத்துகின்றோம். நீ கற்பித்ததைத் தவிர வேறெதனையும் நாம் அறிய மாட்டோம்'. எனப் பதிலளித்தனர். பின்னர் அல்லாஹ்வின் கட்டளைப்படி ஆதம் (அலை) அவர்கள் அப்பெயர்களைக் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து மலக்குகளை நோக்கி, ஆதமுக்கு ஸுஜூது செய்யுமாறு பணித்தான். எல்லா மலக்குகளும் ஸுஜூது செய்தனர். ஆனால் உடனிருந்த ஜின் இனத்தைச் சேர்ந்த இப்லீஸ் ஸுஜூது செய்ய மறுத்துவிட்டான். 'நான் ஆதமைவிட உயர்ந்தவன். ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர். நான் நெருப்பால் படைக்கப்பட்டவன்' என்று காரணம் காட்டி, தனது செயலை நியாயப்படுத்தினான். அல்லாஹ்வின் கட்டளையை மீறியதால் அவன் சாபத்துக்குள்ளானான்.

இப்லீஸ் தான் சாபத்துக்கு உள்ளாவதற்குக் காரணமாக அமைந்த ஆதம் (அலை) அவர்களை வழிகெடுக்க உறுதி பூண்டான்.

ஆதம் (அலை) அவர்கள், மனைவி ஹவ்வாவுடன் சுவனத்தில் இருந்தார் கள். அங்கு சுவன இன்பங்களை அனுபவிக்க அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால், குறிப்பிட்ட ஒரு மரத்தை மாத்திரம் அணுக வேண்டாமென தடுக்கப்பட்டார்கள். இப்லீஸ் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த எண்ணினான். குறிப்பிட்ட மரத்தின் பழங்களைச் சுவைத்தால் சுவனத்தில் நிரந்தரமாக வாழலாம் என அவர்களுக்கு ஆசையூட்டினான். அவனது மாய வார்த்தையை நம்பிய அவர்கள் உண்மையை மறந்து குறிப்பிட்ட மரத்தின் கனியைப் புசித்தனர். இதனால் அல்லாஹ்வின் கோபத்துக்கு உள்ளாகினர்.

அல்லாஹ் அவர்களைப் பூமிக்கு இறக்கினான். தம்பதியர் இருவரும் இரண்டு பிரதேசங்களில் இருந்தனர். தாம் செய்த தவறை நினைத்து நீண்ட காலம் அழுதனர். தம்மை மன்னிக்குமாறு அல்லாஹ்விடம் மன்றாடினர்.

'எங்கள் இறைவனே, எங்களுக்கு நாங்கள் தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள்புரியாவிட்டால் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்' (7:23) என்று பிரார்த்தித்தார்கள்.

அல்லாஹ் அவர்களை மன்னித்தான். இருவரையும் ஓரிடத்தில் சந்திக்க வைத்தான். அவர்கள் குடும்ப வாழ்வை நடத்தினர். அவர்களுக்குத் தேவையான வாழ்க்கை வசதிகளை அல்லாஹ் ஏற்படுத்திக் கொடுத்தான். அவர்களிலிருந்தே மனித இனம் பெருகியது. ஆணும் பெண்ணுமாக இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றனர். அவர்களின் சந்ததிகளே பூமியில் வாழ்கின்ற மனிதர்களாவர்.

'சூரியன் உதயமாகும் நாட்களில் மிகச் சிறந்தது வெள்ளிக் கிழமையாகும். அந்நாளில்தான் ஆதம் (அலை) படைக்கப்பட்டார்கள். சுவர்க்கத்தில்

இருத்தப்பட்டார்கள். சுவர்க்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். அந்நாளிலேயே மரணமானார்கள்'. (முஸ்லிம்) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். அவரது மரணத்தின் பின்னர், அவர் மகன் ஷீது (அலை) நபியானார்கள். மக்களுக்கு வழிகாட்டினார்கள். அவர்களுக்கு ஸுஹுபுகள் வழங்கப்பட்டன.

**பயிற்சி**

1. சுருக்கமான விடை தருக

   (அ) ஆதம் (அலை) எதனால் படைக்கப்பட்டார்கள்?

   (ஆ) அவர்களது மனைவியின் பெயர் என்ன?

   (இ) அவர்கள் வபாத்தான நாள் எது?

2. ஆதம் (அலை) அவர்கள் (மனித இனம்) பற்றி மலக்குகள் தெரிவித்த கருத்தைத் தருக

3. இப்லீஸ், ஆதம் (அலை) அவர்களுக்கு ஸுஜூது செய்ய மறுத்தது ஏன்?

4. ஆதம் (அலை) அவர்களுக்கும் வெள்ளிக் கிழமைக்குமுள்ள தொடர்பை எடுத்துக்காட்டுக.

5. மனிதனுக்கும், ஜின்களுக்குமிடையிலான வேறுபாடுகள் இரண்டைத் தருக